بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

**இடம் : பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல் – இலண்டன்.**

August 23
2013

**தமிழாக்கம் : மவ்லவி S. அப்துல் காதிர் சாஹிப்**

# U.K. ஜல்ஸா ஸாலானா 2013 மற்றும் விருந்தோம்பல்

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் அருளால் இன்சா அல்லாஹ் அடுத்த ஜுமுஆவிலிருந்து U.K. –வின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. ஆண்டு மாநாடு தொடங்குவதற்கு வெகு நாட்களுக்கு முன்னதாகவே அதன் வேலைகள் ஆரம்பமாகி விடுகின்றன. U.K. –வின் ஆண்டு மாநாட்டிற்காக தற்காலிகமான ஏற்பாடுகள் செய்து, தற்காலிகமாக ஒரு நகரமே அமைக்கப்படும் அளவிற்கு மிகவும் விரிவானதாகும். பாகிஸ்தானில் மாநாடுகள் நடந்தன. அங்கு மாநாட்டிற்கான ஏற்பாடுகள் நிரந்தரமான ஏற்பாடுகளைக் கொண்டதாக இருந்தன. நிரந்தரமாக பல லங்கர் இயங்கி வந்தது. அவ்வாறே தங்குவதற்கான ஏற்பாடும் கிட்டத்தட்ட நிரந்தரமானதாக இருந்தன.

இதற்கு முன்னதாக பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் ஜமாஅத்திற்கு சொந்தமாக இருந்த போது, அது விருந்தினர்களைத் தங்க வைக்கும் இடமாக இருந்தன. ஆனால் அவற்றை அரசு எடுத்துக் கொண்ட பின் பிற தங்குமிடங்கள் அமைக்கப்பட்டன. அதிகமான எண்ணிக்கையில் மக்கள் வந்ததன் காரணமாக கூடாரங்கள் அமைத்து தற்காலிக தங்கும் இடங்களும் அமைக்கப்பட்டன. இது தவிர ரப்வாவில் வசிப்பவர்களும் விருந்தினர்களின் ஒரு பெரும் எண்ணிக்கையை தம் வீடுகளில் தங்க வைத்தனர். அவர்களுக்கு உணவு லங்கர் கானாவிலிருந்து கொடுக்கப்பட்டு வந்தது.

எவ்வாறிருப்பினும், ரப்வாவின் மாநாட்டிற்கு சில நிரந்தரமான ஏற்பாடுகள் இருந்தன. ஒரு நீண்ட கால அனுபவத்தால் ஒரு நிரந்தரமான அமைப்பு இருந்ததுடன், ரப்வாவின் மக்களும் இந்த ஏற்பாடுகளைச் செய்வதில் திறமைசாலிகளாக ஆகிவிட்டனர். அவர்களின் இந்தப் பொலிவு மற்றும் தர்பிய்யத்தின் இந்த சுற்றுச்சூழல் மற்றும் தொண்டாற்றுவதற்கான உணர்வு ஆகியவை இவர்களின் வாழ்வில் மீண்டும் அங்கமாக ஆவதற்கு இறைவன் வழிவகை செய்வானாக!

அவ்வாறே காதியானிலும் பல வகை ஏற்பாடுகள் இப்போது நிரந்தரமாகி விட்டன. திடல் மட்டுமே அதிகமாக தற்காலிக ஏற்பாட்டின் அடிப்படையில் செய்ய வேண்டியதுள்ளது. லங்கர் கானாவிற்காக அஹ்மதி அல்லாத அல்லது முஸ்லிம் அல்லாத பிற கூலி ஆட்களை வரவழைக்க வேண்டியதுள்ளது. உணவு சமைப்பதற்கும், ரொட்டி தயாரிப்பதற்கும் சமையல்காரர்களை வெளியிலிருந்து ஏற்பாடு செய்ய வேண்டியதுள்ளது. ஆனால் அங்கும் லங்கர் கானா நிரந்தரமான ஏற்பாடு உள்ளது.

இவ்வாறே ஜெர்மனியிலும் பல நிரந்தர ஏற்பாடுகள் உள்ளன. ஹால் கிடைத்திருப்பதால் இந்த ஏற்பாடு நிரந்தரமாக உள்ளது. உணவு சமைக்க வேண்டியுள்ளது. அவர்கள் கடைகளிலிருந்து ரொட்டி வாங்குகின்றனர். அதை அவர்கள் புதிய ரொட்டி என்று எண்ணி சாப்பிடுகிறார்கள். ஆனால் அது ஒரு வாரம் கடந்த பழைய ரொட்டி என்று நான் கருதுகிறேன். அவ்வாறு இல்லையென்றால் ஜெர்மன் மக்கள் தகவல் அனுப்புவதில் மிகவும் சுறுசுறுப்பானவர்களாவர். இன்று மாலைக்குள் இந்த ரொட்டிகள் புதியவையா? அல்லது பழைய ரொட்டிகளா? என்று தகவல் அனுப்பி விடுவார்கள்.

அவ்வாறே உலகின் பிற நாடுகளில் நடக்கும் மாநாடுகளின் நிலையும் ஆகும். ஆனால் இங்கிலாந்தில் ஆண்டு மாநாடு கிலாஃபத் இங்கு இருப்பதன் காரணமாக சர்வதேச மாநாடாகி விட்டது. கடந்த மாநாடு வரை A to Z எல்லா ஏற்பாடுகளும் தற்காலிகமானதாகவே இருந்தன. முன்பு இஸ்லாமாபாத்தில் மாநாடுகள் நடந்தன. அங்கு உணவு சமைப்பதற்கு ஒரு நிரந்தர ஏற்பாடு இருந்தது. அவ்வாறே ஓரளவு ரொட்டியின் தேவையும், அங்கிருந்த ரொட்டி தயாரிக்கும் இயந்திரத்தின் மூலம் நிறைவேறி வந்தது.

ஆனால் மாநாடு ஹதீகத்துல் மஹ்திக்கு மாற்றப்பட்ட பிறகு, கடந்த இரண்டு மூன்று மாநாடுகளில் உணவு இங்கு அமைக்கப்பட்ட தற்காலிக லங்கரில் சமைக்கப்பட்டு வந்தது. ஏனெனில் இஸ்லாமாபாத்திலிருந்து உணவு இங்கு கொண்டு வருவதில் சிரமம் ஏற்பட்ட அனுபவம் உண்டு. கொஞ்சம் ரொட்டி இஸ்லாமாபாத்தில் சமைக்கப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டது. கொஞ்சம் கடையிலிருந்து வாங்கப்பட்டது. இதன் காரணமாக மிகவும் அதிக சிரமம் ஏற்பட்டு வந்தது.

ஆகவே இங்குள்ள கவுன்ஸிலுடன் பேச்சு வார்த்தை நடத்தி, ஹதீகத்துல் மஹ்தியில் நிரந்தரமான ஒரு சமையலறை கட்டுவதற்கு அனுமதி கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்தோம். ஏனெனில் கூடாரங்கள் அமைத்து தற்காலிகமான சமையலறை உருவாக்குவது மிகவும் சிரமமாக இருப்பதுடன் இன்னும் சில வகையில் அது ஆபத்தானதாகவும் உள்ளது.

இவ்வாண்டு கவுன்ஸில் கருணை கூர்ந்து நிரந்தரமான சமையலறை கட்டுவதற்கு அனுமதி தந்தது. Storage –ற்காக அமைக்கப்பட்ட Shed –களில் ஒன்றை உள்ளேயும் வெளியேயும் சரிசெய்து நிரந்தரமான சமையலறை லங்கருக்காக தயாராகி விட்டது. இன்சா அல்லாஹ் இனி தேவைக்கேற்ப இங்கேயே உணவு தயாராகி விடும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆனால் ரொட்டிக்கு என்ன செய்வது? என்ற கேள்வி எழுந்தது. அதற்காக முந்தைய வழக்கத்தைப் போன்றே கடைகளில் வாங்கியும், இஸ்லாமாபாத்தில் சமைத்தும் கொண்டு வந்து விடலாம் என்று அமீர் சாஹிப் மற்றும் பிறர் கருதினர். புதிய இயந்திரம் ஒன்றை வாங்குங்கள் என்று நான் கூறினேன். ஆனால் செலவு அதிகமாகும் என்பதால் அவர்கள் தயங்கினர். மேலிடம் உங்களுக்கு கடன் கொடுக்க வாய்ப்புள்ளது என்று நான் கூறியதும், அவர்களுக்கு ரோசம் வந்து கொஞ்சம் செலவு செய்ய முன் வந்தனர். அல்லாஹ்வின் அருளால் லெபனானிலிருந்து ரொட்டி தயாரிக்கும் இயந்திரம் வாங்கப்பட்டது.

பாகிஸ்தானிலுள்ள நமது ஓர் தூய அஹ்மதி நண்பர் லெபனான் சென்று இந்த இயந்திரத்தை வாங்கி வந்து இங்கு வைத்தார். இப்போதும் அதற்காக நேரத்தை செலவிடுகிறார். காதியானிலும் ரப்வாவிலும் இந்த இயந்திரத்தை வைத்த அனுபவம் அவருக்கு உண்டு. எனவே இந்தப் பணி இங்கு மிகவும் அழகிய முறையில் நடந்து விட்டது. ஹதீகத்துல் மஹ்தியிலும் மாநாட்டின் போது அல்லாஹ்வின் அருளால் உணவு சமைப்பதற்கும், ரொட்டி தயாரிப்பதற்கும் நிரந்தரமான ஏற்பாடு உள்ளது.

இதற்காக அனுமதி வழங்கிய கவுன்ஸிலுக்கும் நாம் நன்றி தெரிவிக்கிறோம். அல்லாஹ் அவர்களுக்கு இதற்கான நற்கூலியை வழங்குவானாக! ஆனால் இருப்பினும் உலகில் நடக்கின்ற பிற நாடுகளின் மாநாட்டை இதனுடன் ஒப்பிடுகையில் ஏறக்குறைய முப்பதாயிரம் பேரை தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளில் பெரும்பாலும் இன்னும் தற்காலிகமாகவே செய்யப்படுகின்றன. குறிப்பாக மழை பெய்து விட்டால் தங்குமிடங்களும், வழிப்பாதைகளும் மோசமாகி விடுகின்றன.

வழிப்பாதையின் பிரச்சனையை Track விரித்து ஓரளவு சரிசெய்யப்படுகிறது. ஆனால் தங்குமிடங்களுக்காக கூடாரங்கள் அமைக்கப்படுகின்றன. சின்னக் கூடாரங்கள் உள்ளன. உணவு பரிமாறும் இடம் என்று இன்னும் பல பிரச்சனைகள் உள்ளன. அவை இப்போதும் பிரச்சனைகளாகவே உள்ளன. இன்சா அல்லாஹ் ஒரு காலம் வரும். அப்போது இந்தப் பிரச்சனைகளும் தீர்ந்து விடும். இந்த தற்காலிக நகரம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒரு நிரந்தரமான நகரமாகி விடும். இது வெகு தூரமில்லை.

நான் கூறியது போன்று இந்த ஏற்பாடுகள் அனைத்தும் தற்காலிகமானவையாகும். தற்காலிகமாக ஒரு நகரத்தை அமைப்பது மிகப்பெரிய வேலையாகும். இதன் பெருமளவு ஏற்பாடுகளை நமது தன்னார்வத் தொண்டர்கள் செய்கின்றனர். குத்தாம்களும் உடல் ஆரோக்கியம் உள்ள அன்ஸார்களும் இந்தப் பணியை வகாரே அமல் மூலம் செய்கின்றனர். கடந்த வெள்ளிக்கிழமை நான் தற்செயலாக ஹதீகத்துல் மஹ்தி சென்றேன். அங்கு ரொட்டி மெஷின் அமைக்கப்பட்டு அதை பரிசோதித்துக் கொண்டிருந்த மக்களை தவிர இளைஞர்களும், குழந்தைகளும், பெரியவர்களும் தமது பணிகளைச் செய்வதற்கு அங்கு வந்து சேர்ந்திருந்தனர். மாநாட்டின் ஏற்பாடுகளை இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பே சிறந்த முறையில் நிறைவேற்ற முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

இங்கு இன்னொன்றையும் நான் சொல்லி விடுகிறேன். ரொட்டி மிஷினைக் கொண்டு வந்து வைத்து அதை இயக்குகின்ற பணியை வெளியிலிருந்து வேறு கம்பெனிகள் ஏதும் செய்யவில்லை. மாறாக எல்லா பணிகளையும் நமது தன்னார்வத் தொண்டர்களும், நமது இஞ்சினியர்களும், நமது டெக்னீஷியன்களும், நமது பணியாளர்களும் சேர்ந்து செய்துள்ளார்கள். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் இதற்கான நற்கூலி வழங்குவானாக!

இங்குள்ள தரத்தையும் முழுமை செய்வது மிகவும் அவசியமாகும். இந்தியா அல்லது பாகிஸ்தானில் ஏனோதானோவென்று விருப்பப்படி வேலை செய்யப்படும். கண்காணிப்பு ஏதும் இருக்காது. மின்சார ஒயர்கள் தொங்கிக் கொண்டிருக்கும் அல்லது சில அடிப்படை அம்சங்கள் மட்டும் இருக்கும். ஆனால் இங்கு அப்படி அல்ல. ஒவ்வொரு பணியும் செக்கிங் செய்யப்படும். அரசுத்துறை வந்து மேற்பார்வையிடும். ஒப்புதல் வழங்கப்பட்ட பின்பு அடுத்த வேலையைச் செய்ய அனுமதி வழங்கப்படும்.

அல்லாஹ்வின் அருளால் ரொட்டி மெஷின் மற்றும் சமையலறை அவர்கள் கூறிய தரத்தின் படி அமைந்திருந்ததால் அதற்கான அனுமதியும் கிடைத்தது. நான் கூற வந்ததன் நோக்கம் என்னவென்றால், தற்காலிக ஏற்பாடுகளைச் செய்வதற்கும் பிற இடங்களை விட இங்கு அதிகமாக உழைக்க வேண்டியதுள்ளது. அல்லாஹ்வின் அருளால் அஹ்மதி தன்னார்வத் தொண்டர்கள் மிகவும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் இந்தப் பணிகளைச் செய்கின்றனர். ஜமாஅத்திற்காக நேரத்தை ஒதுக்க வேண்டும் என்ற இந்த உணர்வு அஹ்மதிகளின் தனிப்பெரும் அடையாளமாக ஆகிவிட்டது. ஒவ்வொரு வேலைக்காகவும் அஹ்மதிகள் தமது தியாகத்தை முன் வைக்கின்றனர். பொறியாளர்களின் பிரிவு தன் பணியைச் செய்கிறது. மருத்துவர்கள் பிரிவு தன் பணியைச் செய்து வருகிறது. இன்னும் பிற துறைகளைச் சேர்ந்தவர்கள் தத்தமது பணிகளைச் செய்வதற்காக தமது நேரத்தை செலவிடுகின்றனர்.

முழு வருடமும் அவர்கள் தமது இந்த பணிகளைச் செய்து வந்தாலும் மாநாட்டுப் பணிகள் தனியாக நடக்கின்றன. ஆகவே இங்கு தன்னார்வத் தொண்டுப் பணிகள் அதிகமாக நடைபெறுகின்றன. இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தனிப்பெரும் சிறப்பாகும். குறிப்பாக முழு வருடமும் தர்பிய்யத் வழங்கியதன் காரணமாக மாநாட்டின் போது விருந்தினர்களை உபசரிப்பது உலகெங்கிலும் உள்ள அஹ்மதிகளின் தனிச் சிறப்பாகும். குழந்தைகள், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மாநாட்டின் நாட்களில் தொண்டு செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையில் உள்ளனர். அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்ற மிகவும் மும்முரமாகவும், ஈடுபாட்டுடனும் உழைக்கின்றனர். அவ்வாறு இருக்கவும் வேண்டும்.

ஏனெனில் மாநாட்டிற்கு வருகின்ற விருந்தினர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்கள் ஆவர். இந்த விருந்து உபசரிப்பு உயர்ந்த நல்லொழுக்கமும், மார்க்கக் கட்டளையும் ஆகும். இங்கு நான் இதையும் கூறிவிட விரும்புகிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்து உபசரிப்பின் தரம் எவ்வாறிருந்தது? இதை கூறுவதால் நமது விருந்து உபசரிப்பின் தரமும் இன்னும் உயர வேண்டும்.

ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உடல் நலம் சரியில்லாமல் இருந்தார்கள். அவர்கள் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு விருந்தினர் வந்தார். விருந்தினர் வந்துள்ளார் என்று அவர்களுக்கு செய்தி அனுப்பப்பட்டது. உடனே அவர்கள் வெளியில் வந்தார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்: விருந்தினருக்கு சில உரிமைகள் உள்ளன. அவர் சிரமப்பட்டு வந்துள்ளார். எனவே நான் அந்த உரிமையை நிறைவேற்றுவதற்காக வெளியில் வந்து விட்டேன். இன்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்காக இந்த தரத்தை நாம் நிலைநாட்டிட வேண்டும். ஏனெனினல் இன்று விருந்து உபசரிப்பதற்காக நமக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வாய்ப்பு, அவர்கள் வெறும் விருந்தாளிகள் மட்டுமல்ல. மாறாக, மார்க்கத்திற்காக பயணத்தை மேற்கொண்டு வருகின்ற விருந்தாளிகள் ஆவர். மாநாட்டின் இந்த மூன்று நாட்களில் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றுக்களைக் கேட்பதற்காக வருகின்றனர். மேலும் தமது ஆன்மீக மற்றும் மார்க்க நல்லொழுக்கத்திற்கான வழியை மேற்கொள்வதற்காக வருகின்றனர். பரஸ்பரம் அன்பு, சகோதரத்துவம் மற்றும் நேசம் ஆகியவற்றின் சூழலை ஏற்படுத்திக் கொள்வதற்காக வருகின்றனர். பல விருந்தினர்கள் மிகவும் சிரமப்பட்டு இங்கு வருகின்றனர். சிலர் தமது வீடுகளில் மிகவும் வசதியாக வாழக்கூடியவர்கள் இங்கு வருகின்றனர். இங்கு உலக வசதி வாய்ப்புகளைப் பொருத்தவரை அது ஏறக்குறைய ஒன்றுமில்லை. இங்கு வந்து அவர்கள் மிகவும் கஷ்டத்தில் கழிக்கின்றனர். இருந்தும் அவர்கள் வருகின்றனர். சில ஏழை விருந்தாளிகள் உள்ளனர். அவர்கள் தமக்கு சிரமத்தை ஏற்படுத்திக் கொண்டு இங்கு வருகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குரலுக்கு லெப்பைக் என்று கூறியவாறு காலத்தின் கலீஃபாவை சந்திக்கவும் அவரது கூற்றுக்களைக் கேட்பதற்கும் இங்கு வருகின்றனர்.

M.T.A. அஹ்மதி மக்களை அருகில் கொண்டு வந்து விட்டது. இருப்பினும் மாநாட்டின் நாட்களில் விருந்தினருக்கு என்ன சிரமம் இருக்க முடியும்? என்று எண்ணக் கூடாது. சிலர் வயது முதிர்ந்து பல நோய்களுக்கு ஆளாகியிருந்து சிரமப்பட்டு பயணம் மேற்கொண்டு இங்கு வருகின்றனர். நான் ஏற்கனவே கூறியது போன்று சிலர் தம் வீட்டில் உள்ள வசதிவாய்ப்புகளை விட்டு விட்டு மார்க்கத்திற்காக பயணம் செய்கின்றனர்; கூடாரங்களில் தூங்குகின்றனர்; மிகவும் எளிய உணவை உண்டு பொறுத்துக் கொள்கின்றனர். ஆகவே இப்படிப்பட்ட விருந்தினர்களுக்கு நம்மீது அதிகமாக உரிமைகள் உள்ளன.

அல்லாஹ்வின் அருளால் விருந்தாளிகளில் பெரும் எண்ணிக்கை மாநாட்டின் நோக்கத்திற்காக மட்டுமே வருகின்றனர். பயணச் செலவும் இப்போது மிகவும் அதிகரித்து விட்டது. இருந்தும் அவர்கள் செலவு செய்கின்றனர். இவற்றை பொருட்படுத்துவதில்லை. ஆகவே இந்த விருந்தினர்களை மதிப்பது நம்மீது கடமையாகும். இவர்கள் மிகவும் கண்ணியத்திற்குரிய விருந்தினர்களாவர். இவர்களின் நோக்கம் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் விருப்பம் மட்டுமே ஆகும்.

**விருந்தினர்கள் தொடர்பாக அறிவுரை கூறியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

பாருங்கள்! விருந்தினர்கள் பலர் வந்துள்ளனர். அவர்களில் சிலரை நீங்கள் அடையாளம் தெரிந்திருக்கிறீர்கள். சிலரை உங்களுக்குத் தெரியாது. எனவே எல்லாரையும் மதிப்பிற்குரியவர்கள் என்று எண்ணி அவர்களை உபசரியுங்கள். நீங்கள் விருந்தினர்களுக்கு வசதி செய்து கொடுக்கிறீர்கள் என்று நான் உங்கள் மீது நல்லெண்ணம் கொள்கிறேன். எல்லா விருந்தினர்களுக்கும் நல்ல முறையில் தொண்டு செய்யுங்கள்.

ஆகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்கள் மார்க்க நோக்கத்திற்காக வந்துள்ளனர். அவர்களது குறிக்கோள் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதாகும். எனவே நாம் மிகவும் கவனத்துடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நல்லெண்ணத்தைப் பாதுகாத்துக் கொள்வதும் கவனத்தில் கொள்வதும் அவசியமாகும். நமது உள்ளத்தில் எல்லா விருந்தினர்களையும் உபசரிக்க வேண்டும் என்ற உணர்வு இருக்க வேண்டும். விருந்தினர்களுக்கு உரிமை இருக்கிறது என்ற எண்ணம் எப்போதும் நமது உள்ளத்தில் இருக்க வேண்டும்.

டியூட்டி கொடுக்கின்ற ஒவ்வொருவரும் இந்த உரிமையைச் சரியாகச் செலுத்த வேண்டும் என்ற உணர்வு கொண்டவராக இருக்க வேண்டும். இதனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கொண்ட நல்லெண்ணத்தின் படி பொருத்தமானவர்களாக நாம் இருக்க வேண்டும்.

இறைவனின் மஸீஹே! இறை தூதர் (ஸல்) அவர்களின் உண்மை நேசரே! உமது ஒவ்வொரு அறிவுரையின் படி நாங்கள் இன்றும் செயல்படுபவர்களாக இருக்கிறோம் என்று கூறுபவர்களாக நாம் இருக்க வேண்டும். ஓர் அஹ்மதியிடம் இதுவே எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு நூற்றாண்டு கடந்த இந்த பயணம் நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அறிவுரைகளிலிருந்து கவனமற்றவர்களாக ஆக்கி விடவில்லை. இன்றும் நமது குழந்தைகள், முதியவர்கள், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவரும் தத்தமது கடமைகளை நிறைவேற்ற முடிந்த வரை முயற்சி செய்கின்றனர். இன்சா அல்லாஹ் முயற்சி செய்து கொண்டே இருப்பர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த வேதனை மற்றும் கவலையை எப்போதும் கவனத்தில் கொள்வது அவசியமாகும். இதை கவனத்தில் கொண்டவாறு முயற்சி செய்து கொண்டே இருப்போம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

எந்த விருந்தாளிக்கும் துன்பம் ஏற்படக் கூடாது என்பதில் நான் எப்போதும் கவனமாக இருக்கிறேன். இதற்காக நான் எப்போதும் வலியுறுத்தி வருகிறேன். முடிந்த வரை விருந்தாளிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

விருந்தாளியின் உள்ளம் கண்ணாடியைப் போன்று மிருதுவாக இருக்கிறது. சிறிய மோதல் ஏற்பட்டாலும் அது உடைந்து விடும்.

இது மிகவும் முக்கியமான அறிவுரையாகும். இது நமது வாய்வழிப் பேச்சாக மட்டும் இருக்காமல் செயல்பூர்வமான முன்மாதிரியாக இருக்க வேண்டும். உலகின் பல்வேறு நாடுகளில் மாநாடுகள் நடைபெறுகின்றன. அங்கும் விருந்தினர்கள் வருகின்றனர். ஆனால் இங்கு குறிப்பாக உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து பலதரப்பட்ட சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் மாநாட்டிற்கு வருகின்றனர். ஒவ்வொரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் தரம் வெவ்வேறானதாகும். அவர்களின் சகிப்புத் தன்மையின் தரம் வெவ்வேறானதாகும். அவர்களின் பேச்சு, பழக்க வழக்கம் மற்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் விதம் வெவ்வேறாகும். அவர்கள் நம்மீது வைத்துள்ள எதிர்பார்ப்புகள் வெவ்வேறாகும். அவர்கள் வழங்கும் முன்னுரிமைகள் வெவ்வேறாகும். எனவே ஒவ்வொருவருடனும் மிகுந்த ஞானத்துடன் பழகுவது அவசியமாகும்.

இதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வழங்கிய இந்த ஞானம் பொருந்திய அறிவுரையை எப்போதும் நமது கவனத்தில் கொண்டால் பிறகு எல்லா பிரச்சனைகளும் சரியாகி விடும். அவர்கள் கூறினார்கள்: விருந்தினர்களின் உள்ளம் கண்ணாடியைப் போன்று மிருதுவானதாகும். அதில் சிறிய மோதல் ஏற்பட்டாலும் அது உடைந்து விடுகிறது.

தொண்டு செய்யக்கூடிய ஒவ்வொருவரும் இந்த அறிவுரையை நன்றாக மனதில் பதித்துக் கொண்டால் அவ்வப்போது உருவாகும் சின்னச் சின்ன பிரச்சனைகள் கூட உருவாகாது. ஒருபோதும் புகார் வராது. வேண்டுமென்றே பிரச்சனைகளை உருவாக்க நினைப்பவர்களைத் தவிர வேறு பிரச்சனைகள் உருவாகாது. அப்படி செய்யும் போது சில கடினமான போக்கைத் தவிர்க்க முடியாது. கடந்த ஆண்டு பெண்கள் பகுதியில் உணவு வழங்கும் போது ஒரு சம்பவம் நடந்தது. வெகு தூரப் பகுதியிலிருந்து வந்திருந்த ஒரு பெண் விருந்தினர் ஏதோ காரணத்தால் கோபமடைந்துள்ளார். அதில் பணிபுரிந்த நபர்களிடம் தவறு இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாம் இதற்கு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் சீர்திருத்தம் ஏற்பட முடியும். அதற்காக பல்வேறு விளக்கங்கள் கொடுப்பதற்குப் பதிலாக நாம் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இம்முறை தப்ஷீர் –ன் விருந்தினர்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் பகுதியில் குறிப்பாக கவனம் செலுத்துவது அவசியமாகும். யாருக்கும் எந்த கஷ்டமும் இருக்கக் கூடாது. நான் இப்போது கூறுவது வெளிநாட்டு விருந்தினர்களைப் பற்றியதாகும். இவர்கள் நான் ஏற்கனவே கூறியது போன்று வெளிநாடுகளிலிருந்து வரும் விருந்தினர்களாவர். நம்மைப் பொருத்தவரை எல்லாருமே விருந்தினர்கள் தான்.

இந்த துறையில் நான் சில மாற்றங்களைச் செய்துள்ளேன். இந்த மாற்றங்கள் அமைப்பு ரீதியான மாற்றங்களாகும். இதில் பெரும்பாலும் வக்ஃபே நவ் ஆண்களையும் வாக்கிஃபாத்தே நவ் பெண்களையும் சேர்த்துள்ளேன். அல்லாஹ்வின் அருளால் பல வக்ஃபே நவ் ஆண்களும் பெண்களும் தமது இந்தப் பணிகளைப் பொறுப்பேற்றுச் செய்யும் பக்குவத்தை அடைந்து விட்டனர். இவ்வாறு வக்ஃபே நவ் ஆண்களையும் பெண்களையும் வழங்கி அல்லாஹ் நம்மீது மாபெரும் அருள் புரிந்துள்ளான். சிலர் நிரந்தரமாக ஜமாஅத்திற்கு தொண்டு செய்து கவனித்து வருகின்றனர். சிலர் தற்காலிக ஏற்பாடுகளில் தொண்டு செய்ய முன்வருகின்றனர். இன்சா அல்லாஹ் இதற்கான தரம் முன்பை விட சிறப்பாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். ஆனால் நபர்களை மாற்றுவதாலோ, முகங்களை மாற்றுவதாலோ மட்டும் மேம்பாடு ஏற்படுவதில்லை. மாறாக அல்லாஹ்வின் அருள் நம்முடன் இருக்க அவனிடம் துஆ செய்ய வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மேலும் இறைவன் நம்மிடம் எதிர்ப்பார்ப்பதன்படி செயல்பட வேண்டும். இதற்காக இறைவனிடம் நற்பாக்கியம் வேண்டி துஆ செய்ய வேண்டும்.

தவறான எண்ணங்கள் ஏற்பட வாய்ப்பு இல்லாத வண்ணம் அமைய வேண்டும். விருந்து உபசரிப்பது தொடர்பாக நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். இங்கிலாந்தைச் சேர்ந்த அஹ்மதிகள் குறிப்பாக இலணடனில் வாழ்ந்து வரும் அஹ்மதிகள் வெளிநாடுகளிலிருந்து வரும் விருந்தாளிகள் உங்களுக்கும் விருந்தாளிகள் என்பதை புரிந்து கொள்ளுங்கள். வெளிநாடுகளிலிருந்து வரும் விருந்தாளிகளின் எண்ணிக்கை ஏறக்குறைய மூவாயிரம் வரை இருக்கலாம். விசா கிடைத்தால் இதை விட அதிகமாகவும் வர வாய்ப்புள்ளது. எனவே இங்குள்ள அஹ்மதிகளுக்கு ஒரு குறிப்பிட்ட டியூட்டி இருந்தாலும் இல்லா விட்டாலும் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் உங்களுடைய விருந்தினர்கள் ஆவர் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். இங்கிலாந்தில் வாழும் அஹ்மதிகளில் டியூட்டி இல்லாதவர்களும் மாநாட்டிற்கு வந்தால் அவர்களும் விருந்தாளிகள் தான். இங்குள்ள அஹ்மதிகளுடன் வெளிநாட்டிலிருந்து வருகின்ற விருந்தினர் யாராவது தொடர்பு கொண்டால் இங்கிலாந்தில் வாழும் ஒவ்வொரு அஹ்மதியும் விருந்து உபசரிப்பவர் ஆவார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். வெளிநாட்டிலிருந்து வருபவர் விருந்தாளியாவார்.

அல்லது இவ்வாறு புரிந்து கொள்ளுங்கள். அதாவது இங்கிலாந்திலிருந்து வருகை தந்துள்ள விருந்தினர்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ள விருந்தினர்கள் ஆகியவர்களுள் ஏதாவது குறிப்பிட்ட சூழ்நிலையில் யாருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற கேள்வி எழுந்தால் எல்லா நிலையிலும் வெளிநாட்டு விருந்தினருக்கு தான் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இங்கிலாந்தைச் சேர்ந்த விருந்தினர்கள் அவர்களுக்காக தியாகம் செய்ய வேண்டும். ஆகவே சில சூழ்நிலைகளில் நீங்கள் விருந்தாளிகளாக இருந்த போதிலும் விருந்து உபசரிப்பவர்களாவீர்கள். இது டியூட்டி கொடுப்பவர்களது பணி மட்டுமல்ல. மாறாக இந்த சிந்தனையை இன்னும் விரிவுபடுத்த வேண்டும். விரிவுபடுத்தியவாறு நீங்கள் தியாகம் செய்பவர்களாக ஆக வேண்டும். இது நடந்தால் மிக அழகான சமூகமாக இது நமக்கு தென்படும். நாம் சில ஹதீஸ்களைப் பார்க்கும் போது விருந்தாளியாக இருப்பதை விட நாம் விருந்து உபசரிப்பவராகவே இருந்து விடலாம் என்ற எண்ணம் தோன்றுகிறது. ஒரு ஹதீஸின் அடிப்படையில் விருந்து உபசரிப்பதும் மூஃமின் ஆவதற்கு ஒரு அடையாளமாகும் என்று அமைகிறது.

**ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ் மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொள்பவர் விருந்தாளியை மதிக்கவும் கண்ணியப்படுத்தவும் வேண்டும்.

இதை வேறு விதமாக கூறுவதென்றால், விருந்தாளியைக் கண்ணியப்படுத்தாதவர் அல்லாஹ் மற்றும் இறுதி நாளின் மீது நம்பிக்கை கொள்வதில் பலவீனமானவர் ஆவார். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு மீண்டும் மீண்டும் விருந்து உபசரிப்பது பற்றி கவனமூட்டியுள்ளார்கள் என்றால், தமது எஜமானர் ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையின் காரணமாகவே ஆகும். திருக்குர்ஆனின் கட்டளையின் காரணமாகவே கவனமூட்டினார்கள். நாம் நமது ஈமானில் உறுதிப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள்.

பிறகு இன்னொரு ஹதீஸில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தமது சகோதரருடன் சிரித்த முகத்துடன் பழகுவதை சிறந்த நன்மை என்று கூறியுள்ளார்கள். ஆகவே மாநாட்டின் இந்த மூன்று நாட்களில் பல்வேறு நன்மைகள் செய்யப்படுகின்றன. இது தவிர சிரித்த முகத்துடன் ஒருவர் மற்றவரிடம் பழகுவதும் ஒரு நன்மையாகும். இதையும் செய்ய வேண்டும். இதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. விருந்து உபசரிப்பவருக்கும் இந்த வாய்ப்பு கிடைக்கிறது. அவ்வாறே விருந்தினர்களுக்கும் இதற்கான வாய்ப்பு கிடைக்கிறது.

குறிப்பாக டியூட்டி கொடுக்கும் பணியாளர்களுக்கு நான் கூறுகிறேன். நீங்கள் ஒருவருடன் ஒருவர் பழகும் போதும், பேசும் போதும், களைப்படைந்து இருக்கும் போது சில நேரம் சிடுசிடு வென்று நடந்து கொள்பவர் அப்போதும் முகமலர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும். மேலதிகாரிகளும் தமக்கு கீழ் பணிபுரியும் நபர்களுடன் சிரித்த முகத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னர் சில சமயங்களில் இவ்வாறு நடந்துள்ளது. அதாவது சில இடங்கள் அல்லது சில உணவுப் பொருட்கள் சில குறிப்பிட்ட நபர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அலுவலகங்களில் குளிர்சாதனப் பெட்டி வைக்கப்படுகிறது. அது மேலதிகாரிகளுக்காக வைக்கப்படுகிறது. அதிலிருந்து உதவியாளர் தண்ணீர் எடுத்துக் குடித்தால் அதற்காக கோபப்படுகின்றனர். இவ்வாறு நமக்கிடையே இருக்கக் கூடாது. எவ்வாறிருப்பினும் நான் குறிப்பிட்டது போன்று டியூட்டி கொடுக்கும் போது இவ்வாறு சில விரும்பத்தகாத செயல்கள் நடக்கின்றன. பெரியவன் சிறியவன் என்ற சிந்தனை எழுகிறது. ஆனால் நாம் எப்போதும் நல்லொழுக்கத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். விருந்தினர்களுடன் நல்லொழுக்கத்துடன் தான் நடந்து கொள்வார். அதைப்போன்று தமக்கிடையிலும் நல்லுறவுடன் நல்லொழுக்கத்துடன் நடந்து கொண்டால் வந்திருக்கும் விருந்தினர்கள் மீதும் இந்த சூழ்நிலை சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் சூழல் இன்னும் சிறப்பு வாய்ந்ததாக இருக்கும். அஹ்மதி அல்லாத பிற விருந்தினர்களிடமும் நல்ல விளைவை ஏற்படுத்தும்.

இவ்வாறு நாம் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தி நாமும் நமது நன்மைகளில் அதிகரித்தவர்களாக இருப்போம். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுபவர்களாக இருப்போம். டியூட்டி கொடுக்கக் கூடிய ஒவ்வொருவரும் இதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அதாவது விருந்து உபசரிப்பது என்பது நாம் விருந்தினர்கள் மீது காட்டும் கருணையல்ல. மாறாக இது விருந்தினரின் உரிமையாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அதை நான் முன்னதாக எடுத்துக் கூறினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

அல்லாஹ் உரிமைகளை நிறைவேற்றுவது தொடர்பாக என்ன கூறுகிறான்? **ஓரிடத்தில் கூறுகின்றான்:**

وَاٰتِ ذَا الْقُرْبٰى حَقَّهٗ وَالْمِسْكِيْنَ وَابْنَ السَّبِيْلِ وَلَا تُبَذِّرْ تَبْذِيْرًا

***நெருங்கிய உறவினர், ஏழை, பயணிகள் ஆகியவர்களுக்குரியதை கொடுத்து விடுக. எவ்வகையிலும் வீண் விரயம் செய்யாதீர். (17:27)***

இங்கு மூன்று வகையாக மக்களின் உரிமைகள் தொடர்பாக கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய கருத்துடன் தொடர்புடைய அம்சத்தை எடுத்துரைக்கிறேன். அதாவது பயணிகளின் உரிமையின் பக்கம் கவனமூட்டுகிறேன். பயணிகளிலும் பல வகை உண்டு. ஆனால் இறைவனுக்காகவும், இறைவன் கூறியதாலும் பயணம் செய்பவர்கள் எல்லாரையும் விட அதிகமாக நற்பேறு பெற்றவர்களாவர். ஒரு ஹதீஸில் வருகிறது. அதாவது அல்லாஹ் மற்றும் அவனது தூதர்களைப் பற்றி பேசப்படுகின்ற கூட்டத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் மீது வானவர்கள் சாந்தியை வழங்க துஆ செய்து

கொண்டிருப்பர். நமது மாநாடுகளும் அல்லாஹ்வின் அருளால் இப்படிப்பட்ட கூட்டங்களே ஆகும். இந்த கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக பயணம் செய்து வருபவர்களின் தகுதி மிகவும் உயர்வானதாகும். ஏனென்றால் அவர்கள் இந்த நோக்கத்திற்காக வருகின்றனர். வானவர்கள் அவர்களுக்காக துஆ செய்கின்றனர். இப்படிப்பட்ட விருந்தினர்களுக்கு தொண்டு செய்வது மற்றும் விருந்து உபசரிப்பதற்கான உரிமையை நிலைநாட்டுபவர்கள் மிகவும் நற்பாக்கியம் பெற்றவர்களாவர். இறைவன் நிர்ணயம் செய்த அந்த உரிமையை நிறைவேற்றுபவர் நிச்சயமாக இறைவனின் விருப்பத்தைப் பெறுபவர் ஆவார். இறைவனின் விருப்பத்தை ஒருவர் பெற்று விட்டால் அவரை விட பேறுபெற்றவர் வேறு யார் இருக்க முடியும்?

ஆகவே சற்று சிந்தித்துப் பார்த்தால் இந்த மாநாட்டின் சூழ்நிலையானது மிகவும் வியக்கத்தக்கதாக உள்ளது. அதாவது ஒரு நன்மைக்குப் பிறகு இன்னொரு நன்மைக்கான வாசல் எல்லாருக்காகவும் திறந்து கொண்டே செல்கிறது. நான் தொடக்கத்தில் கூறியது போன்று தொண்டு செய்யும் மனப்பான்மையின் உணர்வை, தொண்டு செய்யும் ஒவ்வொரு நபரும் புரிந்து கொள்வது அவசியமாகும். அதை கருத்தில் கொண்டு செயல்படுவது அவசியமாகும். இந்த உணர்வுடன் செயல்படுகின்றனர் என்றாலும் இதில் இன்னும் அதிக வளர்ச்சி பெறுவது அவசியமாகும்.

ஜமாஅத்தின் சார்பாக கேட்டுக் கொள்ளப்பட்டது என்பதற்காக, ஏதோ உதவி செய்வதற்காக கூப்பிட்டார்கள் என்பதற்காக அல்லது குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சதர் வகாரே அமல் செய்ய வேண்டும் வாருங்கள்! என்று கூப்பிட்டார்கள் என்பதற்காக அல்லது லஜ்னாவின் தலைவி அழைத்தார்கள் என்பதற்காக, கூட்டத்தோடு கூட்டமாக சேர்ந்துள்ளேன் என்பதற்காக டியூட்டி கொடுப்பவர்கள் பணியாற்றக் கூடாது. மாறாக இறைவனின் விருப்பத்தைப் பெறுவதே நீங்கள் பணிபுரிவதன் நோக்கமாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக எவ்வாறு விருந்து உபசரித்தார்கள்? எவ்வாறு அதற்கான உரிமையைச் செலுத்தினார்கள்? இதற்கான ஓர் உதாரணத்தை நான் எடுத்துரைக்கிறேன். இந்த அறிவிப்பை நாம் எத்தனை முறை கேட்டாலும் படித்தாலும் அது ஒரு புதிய இன்பத்தை வழங்குகிறது. அதில் புதிய படிப்பினைகள் கிடைக்கின்றன.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு பயணி ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம் வீட்டிற்கு ஆள் அனுப்பி, விருந்தாளிக்காக வீட்டிலிருந்து உணவு கொடுத்து விடுமாறு கூறினார்கள். தண்ணீரைத் தவிர இன்று வீட்டில் ஏதுமில்லை என்று அங்கிருந்து பதில் வந்தது. இதன் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த விருந்தினருக்கு உணவுக்கான ஏற்பாடு யார் செய்வார்? என்று கேட்டார்கள். ஒரு அன்ஸாரி நான் ஏற்பாடு செய்கிறேன் என்றார். அதன்படி அவர் தன் வீட்டிற்குச் சென்றார். தன் மனைவியிடம் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் விருந்தினருக்காக உபசரிப்பிற்கான ஏற்பாடு செய் என்றார். அதற்கு இன்று குழந்தைகள் சாப்பிடுவதற்கு மட்டும் தான் உணவு உள்ளது என்று மனைவி கூறினார். சரி! உணவு தயார் செய். விளக்கு ஏற்றி வை. குழந்தைகள் உணவு சாப்பிடும் நேரம் வந்ததும் சமாதானப்படுத்தி தூங்க வைத்து விடு! என்று அன்ஸாரி கூறினார். அவ்வாறே மனைவியும் உணவு சமைத்தார். விளக்கேற்றி வைத்தார். குழந்தைகளைப் பட்டினியுடன் தூங்க வைத்து விட்டார். விளக்கை சரி செய்யும் சாக்கில் எழுந்து சென்று விளக்கை அணைத்து விட்டார். பிறகு இருவரும் விருந்தினருடன் சேர்ந்து உட்கார்ந்து தாமும் உணவு சாப்பிடுவது போல் பாவனை செய்தார்கள். இரவு முழுவதும் இருவரும் பசியுடன் இருந்தனர். மறுநாள் காலையில் அந்த அன்ஸாரி ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் சமூகத்தில் வந்தார். அப்போது அவரைப் பார்த்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நீர் இரவு செய்த திட்டத்தைப் பார்த்து அல்லாஹ்வும் புன்னகைத்தான் என்றார்கள் அல்லது நீங்கள் இருவரும் செய்த அந்த செயலை இறைவன் விரும்பினான் என்று கூறினார்கள். அப்போது இந்த வசனம் இறங்கியது.

وَيُؤْثِرُونَ عَلَىٰٓ أَنفُسِهِمْ وَلَوْ كَانَ بِهِمْ خَصَاصَةٌ ۚ وَمَن يُوقَ شُحَّ نَفْسِهِۦ
فَأُو۟لَـٰٓئِكَ هُمُ ٱلْمُفْلِحُونَ ۝

*தாங்கள் வறுமையில் இருந்தும் தங்களை விட மற்றவர்களுக்கு இவர்கள் முன்னுரிமை கொடுக்கின்றனர். தங்கள் உள்ளத்தின் பேராசையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களே வெற்றி பெறுபவர்களாவர். (59:10)*

பாருங்கள்! இது எவ்வளவு பெரிய தியாகம்! குழந்தைகளைப் பசியுடன் தூங்க வைத்து விட்டு விருந்தினருக்கு உணவு வழங்கி விட்டனர். இன்று அல்லாஹ்வின் அருளால் இப்படிப்பட்ட நிலை மிகக் குறைவானவர்களுக்குத் தான் உள்ளது. குறிப்பாக ஜமாஅத்தின் விருந்தினர்களுக்கு அல்லாஹ்வின் அருளால் இந்த நிலை ஒருவருக்கும் இல்லை. இந்த முழு குடும்பமும் விருந்து உபசரிப்பதற்காக தியாகம் செய்தது. அந்த விருந்தினரும் ஜமாஅத்தின் விருந்தினரே

ஆவார். அவர் மார்க்க நோக்கத்திற்காக வந்த விருந்தினர் ஆவார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை சந்திக்க வந்த விருந்தினராவார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய விருந்தாளியாவார். இப்படிப்பட்ட முன்னுதாரணத்தை நிலைநாட்டி நமக்கு விருந்து உபசரிப்பதற்கான பாடத்தை வழங்கியுள்ளார்கள். ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் விருந்தாளியாக வந்தவருக்கென்று ஒரு உயர் தகுதி இருந்தது. இன்று நபி (ஸல்) அவர்களின் உண்மை நேசருடைய விருந்தாளிகளுக்கும் இறைவன் மிகவும் முக்கியத்துவம் வழங்கியுள்ளான். ஆகவே வேலை செய்கின்ற ஒவ்வொருவரும் இந்த முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.

பாருங்கள்! வெளிப்படையாகப் பார்த்தால் இவ்வாறு செய்வது அநியாயமாகத் தெரியும். குழந்தைகளை வலுக்கட்டாயமாக பட்டினி போட்டுள்ளனர். ஆனால் தியாகம் மற்றும் சேவையின் ஒரு உயர்ந்த முன்மாதிரி நிலைநாட்டப்பட்டுள்ளது. இதில் முழு குடும்பமும் பங்கெடுத்தது. மகிழ்ச்சியுடனும் வேறு வழியின்றியும் இந்த தியாகத்தில் பங்கு பெற்றனர். நிச்சயமாக அந்த குழந்தைகளுக்கும் இறைவன் மிக அதிகமாக அருள்களை வழங்கி இருப்பான். இவ்வசனத்தின் கருத்தில் இது காணப்படுகிறது.

அல்லாஹ் அப்படிப்பட்ட மக்களை *முஃப்லிஹூன் - வெற்றியாளர்கள்* என்று கூறுகின்றான். வெற்றியாளர்கள் என்பதன் பொருளை நாம் பார்க்கும் போது இதன் விரிவான அர்த்தத்தை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. வெற்றியாளர்கள் எனப்படுபவர்கள் வளர்ச்சி பெற்று கனி தரக்கூடியவர்களாவர். வெற்றி பெறக்கூடியவர்கள் ஆவர். அவர்கள் தமது நல்ல உயர்ந்த விருப்பங்களைப் பெறக் கூடியவர்களாவர். இதன் காரணமாக மகிழ்ச்சியைப் பெறக்கூடியவர்களும் நன்மையைப் பெறக் கூடியவர்களும் ஆவர். நிரந்தரமாக இந்த நன்மைகள் மற்றும் வெற்றியின் நிலையில் வாழக்கூடியவர்களாவர். வாழ்வின் நிம்மதியையும் திருப்தியையும் பெறக்கூடியவர்களாவர். இவர்களே பாதுகாப்பின் கீழ் வரக்கூடியவர்களாவர்.

ஆகவே ஒரு வேளை உணவை தியாகம் செய்து விருந்தினரை உபசரிப்பது அவர்களை அல்லாஹ்வின் விருப்பத்திற்கு வாரிசாக்கி எங்கிருந்து எங்கே கொண்டு போய் சேர்த்து விட்டது! இறைவனின் விருப்பத்துடன் இவ்வனைத்தும் கிடைத்து விட்டால் பிறகு அவருக்கு வேறு என்ன வேண்டும்?

ஆகவே எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இதுவே விருந்து உபசரிப்பவருக்கு கிடைக்கும் உயர் தகுதிகளாகும். நாம் நமது விருந்தினர்களுக்கு தொண்டு செய்து அடைய வேண்டிய உயர் நிலை இதுவாகும். இந்த நிலையானது இன்சா அல்லாஹ் நமக்கு இறைவனின் நெருக்கத்தைப் பெற்றுத் தந்து, இவ்வுலக மற்றும் மறுவுலக வாழ்வை சீரமைப்பதற்குக் காரணமாக அமையும். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டு செய்யும் நல்வாய்ப்பை நமக்கு வழங்கி அல்லாஹ் நம்மை வெற்றியாளர்களுடன் சேர்ப்பதற்கான வழிகளைத் திறந்து வைக்கிறான். நமது எல்லா சேவகர்களும் எல்லா பணியாளர்களும் இந்த அருளைப் பெறுபவர்களாக இருக்க அல்லாஹ் அருள் செய்வானாக! மேலும் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. அல்லாஹ் அதிலும் எளிமைகளை வழங்குவானாக!

ஜுமுஆ தொழுகைக்குப் பின் நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பேன். இது நமது சஹீதான ஒரு சகோதரர் மதிப்பிற்குரிய ஸஹூர் அஹ்மது சாஹிப் கியானி உடைய ஜனாஸாவாகும். பிரங்கி டவுண், கராச்சியில் ஆகஸ்டு 21 ஆம் தேதி சஹீதாக்கப்பட்டுள்ளார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

அந்த சம்பவம் இவ்வாறு நிகழ்ந்துள்ளது. ஸஹூர் சாஹிப் தமது ஒரு நண்பருடன் ஆகஸ்டு 21 ஆம் தேதி 11:15 மணிக்கு பழுது பார்ப்பதற்காக கொடுக்கப்பட்ட தமது காரை சரிபார்ப்பதற்காக வீட்டை விட்டு வெளியே வந்தார்கள். வீட்டிலிருந்து சற்று தூரத்தில் கார் நிறுத்தப்பட்டிருந்தது. அவர் வெளியில் வந்ததும் ஜமாஅத்தைச் சேராத இவருடைய நண்பர் பக்கத்து வீட்டுக்காரர் மதிப்பிற்குரிய நூருல் ஹக் சாஹிபும் வெளியே வந்தார். இவர்கள் மூவரும் வண்டியை பார்ப்பதற்காக சென்றனர்.

வண்டி வீட்டிலிருந்து சற்று தொலைவில் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த மூவரும் வண்டியை சரிபார்த்து விட்டு திரும்ப வந்து கொண்டிருந்த போது, ஒரு மோட்டார் சைக்கிளில் இரண்டு பேர் வந்தனர். அவர்களில் ஒருவர் மோட்டார் சைக்கிளை விட்டு கிழே இறங்கி ஸஹூர் சாஹிப் மீது சரிமாரியாக துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார். இதனால் ஸஹூர் சாஹிபின் பக்கத்து வீட்டுக்காரர் நூருல் ஹக் சாஹிப் தாக்குதல் நடத்தியவரின் கையில் ஓங்கி அடித்தார்கள். இதனால் தாக்குதல் நடத்தியவனுடன் வந்த இன்னொருவன் நூருல் ஹக் சாஹிப் மீதும் துப்பாக்கியால் சுட்டான். பிறகு இருவரும் ஓடி விட்டனர். ஸஹூர் சாஹிபின் மகள் துப்பாக்கி சுடும் சப்தத்தைக் கேட்டவுடன் அவர் மாடியில் ஜன்னல் வழியாகப் பார்த்தார். இரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் வந்து துப்பாக்கியால் சுட்டு விட்டு ஓடுவதைப் பார்த்தார். அவர் தேனீர் குடித்துக்

கொண்டிருந்தார். அப்போது அவர் கையிலிருந்த தேனீர் கோப்பையை தாக்குதல் நடத்தியவர் மீது எறிந்தார். உடனே அவர்கள் வீட்டின் ஜன்னலை நோக்கி சுட ஆரம்பித்தனர். ஆனால் மகள் தப்பித்து விட்டார்.

ஸஹூர் சாஹிப் காயமடைந்து வேதனையைத் தாங்க முடியாமல் சம்பவ இடத்திலேயே சஹீதாகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். சஹாதத்தின் போது இவரது வயது 47 ஆகும். இவருடைய வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த நூருல் ஹக் சாஹிப் அவர்களும் காயமடைந்து வேதனையைத் தாங்க முடியாமல் சஹீதாகி விட்டார். அல்லாஹ் அவர்களுக்கும் மன்னிப்பு வழங்குவானாக!

சஹீத் ஸஹூர் சாஹிபின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவருடைய சிறிய தந்தையின் மூலம் கிடைத்தது. அவர்களது பெயர் யூஸுஃப் கியானி சாஹிப் மற்றும் முஹம்மது ஸயீத் கியானி சாஹிப் ஆகும். இவர்கள் இருவருக்கும் 1936 -ல் பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இருவரும் அறிவாளிகளாக இருந்தனர். அவர்கள் நூல்களை அதிகமாக படித்து தெரிந்து கொண்ட பிறகே பைஅத் செய்வதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றனர். அதன் பிறகு சஹீத் மர்ஹூமின் தந்தையும் அவருடைய இன்னும் மூன்று சிறிய தந்தைகளும் அஹ்மதிகளானார்கள். இவருடைய குடும்பம் காஷ்மீரைச் சேர்ந்தது. இவர் 1966 -ல் பிறந்தார். 1976 -ல் இவர்களது குடும்பம் கராச்சிக்கு குடிபெயர்ந்தது. இங்கே இவர் பி.ஏ. வரை கல்வி பயின்றார். பிறகு Federal Board of Revenue -ல் பணிபுரிந்து வந்தார். சஹாதத்தின் போது Customs துறையின் Anti Smuggling -ல் கிளர்க் ஆக பணிபுரிந்து வந்தார்.

ஸஹூர் சாஹிப் ஜமாஅத்துடன் சிறந்த ஒத்துழைப்பு வழங்குபவராக இருந்தார். மிகவும் நல்ல மனிதர். பொருள் தியாகம் செய்வதில் முன்னணியில் இருக்கும் நபர் ஆவார். விருந்து உபசரிப்பது இவருடைய சிறப்புப் பண்பாக இருந்தது. வீட்டிற்கு வந்த விருந்தினர்களை உபசரிக்காமல் திருப்பி அனுப்பியதே இல்லை. ஜமாஅத்தின் பொறுப்பாளர்களை மதிப்பவர் ஆவார். எந்தவொரு புகாருக்கும் வாய்ப்பளிக்க மாட்டார். வஸிய்யத் செய்திருந்தார். அவ்வாறே இவருக்கு தப்லீக் செய்வதிலும் அதிக ஆர்வம் இருந்தது. 2009 -ல் இவர் மூலம் ஒருவருக்கு பைஅத் செய்வதற்கான நல்வாய்ப்பும் கிடைத்தது.

இவருடைய சஹாதத்திற்குப் பிறகு மருத்துவமனையிலும் அதற்குப் பிறகும் ஜனாஸாவின் போது இவருடைய அலுவலகத்திலிருந்து பெரும் எண்ணிக்கையில் மக்கள் வந்து கலந்து கொண்டனர். எல்லாருமே சஹீத் மர்ஹூமின் சிறந்த நல்லொழுக்கத்தையும் உயர்ந்த பண்புகளையும் புகழ்ந்து கூறினர். இவருடைய ஒரு நண்பர் இவரது சஹாதத்திற்குப் பிறகு இவருடைய உடலுக்கு அருகில் நின்று கொண்டிருந்தார். அவர் அழுது கொண்டே இவ்வாறு கூறினார்கள். சஹீது மர்ஹூம் மிகவும் கருணை காட்டுபவரும், சமாதானத்தை விரும்புபவரும் ஆவார். வேலை செய்து கொண்டிருக்கும் போது ஏதாவது காரணத்தால் எனக்கு கோபம் வரும் போது இவர் பொறுமையுடன் இருக்கும்படி வலியுறுத்துவார்.

இவருடைய மேலதிகாரி கூறினார்: ஸஹூர் அஹ்மது கியானி நமது தைரியசாலி சிப்பாயாக இருந்தார். மிகவும் குறுகிய காலத்திலேயே இவர் எல்லாரையும் தம் அழகிய பண்புகளால் ஈர்த்து விடுவார். இன்று நாம் ஒரு நல்ல நண்பரை இழந்து விட்டோம்.

**இவரது மாமனார் பஷீர் அஹ்மது கியானி சாஹிப் கூறினார்:**

சஹீது மர்ஹூம் குடும்பத்தில் அனைவருக்கும் உதவி செய்து வந்தார். பொருளாதாரத்தில் இறைவன் அவர்களுக்கு நல்ல வசதியை வழங்கி இருந்தான். குடும்பத்தில் யாருக்கு என்ன தேவை ஏற்பட்டாலும் இவர் உதவி செய்து வந்தார். குடும்பத்தை தவிரவும் தேவை என்று இவரிடம் யார் வந்தாலும் அவர் வெறுங்கையோடு திரும்பியதில்லை. குழந்தைகளுடனும் இவர் மிகவும் கருணையுடன் நடந்து கொள்வார். குழந்தைகளின் தேவைகளை முழுமையாக கண்காணித்து வந்தார். கல்வியைக் கவனித்து வந்தார்.

**இவருடைய மனைவி கூறினார்கள்:**

அல்லாஹ் இவருக்கு நல்ல உள்ளத்தை வழங்கி இருந்தான். சஹாதத்திற்காகவே இறைவன் இவருக்கு நல்ல உள்ளத்தை வழங்கி இருந்தான் போலும்! இவர் குழந்தைகளை ஒருபோதும் திட்டியது கிடையாது. சஹாதத்திற்கு முன் இவர் கூறினார்: எனது காலணிகளைத் துடைத்து வை. நான் இப்போது வெளியே சென்று வருகிறேன் என்று கூறி சிரித்த முகத்துடன் கீழே இறங்கி வந்தார். துப்பாக்கிச் சூட்டிற்குப் பிறகு நான் குழந்தைகளுடன் வீட்டிலிருந்து வெளியே வந்ததும் அவர்களைப் பார்த்தோம். அவர் என்னையும் என் குழந்தைகளையும் சிரித்த முகத்துடன் பார்த்தார். காயமடைந்த நிலையில் அவர் பார்த்தார். விடை பெறுவதற்காக, உயிரை இறைவனிடம் ஒப்படைத்தார்.

குழந்தைகளை ஒருபோதும் அதட்டியதில்லை. ஆனால் M.T.A. -வில் குத்பா வரும் போது குழந்தைகள் கண்டிப்பாக அதைப் பார்க்க வேண்டும் என்று கூறுவார்கள். இதற்காக கோபப்படுவார்கள். குத்பாவை ஏன் கேட்கவில்லை என்று கேட்பார்கள். பெண் பிள்ளைகளுடன் மிகவும் குறிப்பான அன்பும் கருணையும் காட்டி வந்தார்.

இவரை இழந்து தவிப்பவர்களுள் இவரது மனைவி தாஹிரா ஸஹூர் கியானி சாஹிபா மற்றும் மூன்று மகன்களும், நான்கு மகள்களும் உள்ளனர். இம்ரான் கியானி 20 வயது. காம்ரான் கியானி 14 வயது. ஸர்ஃப்ராஸ் 3 வயது. மகள்களில் நூருஸ்ஸபா 16 வயது. நூருல் அய்ன் 14 வயது. அதிய்யத்துல் முஜீப் 7 வயது. ஃபாயிகா ஸஹூர் 5 வயது.

அல்லாஹ் மர்ஹூமின் தர்ஜாக்களை உயர்த்துவானாக! இவரது குழந்தைகளை இறைவன் தன் பாதுகாவலில் வைப்பானாக! இவரது மனைவியையும் தன் பாதுகாவலில் வைப்பானாக! இந்த இழப்பை பொறுத்துக் கொள்ளும் நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HAZRATH KHALIFATUL MASIH V**

at **BAIT-UL-FUTUH MOSQUE,** London

on **23.08.2013**

Translated by : Maulavi S. ABDUL QADIR Sb.

Typeset by : A. MUHAMMAD NISAR

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456